**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், தைத்திங்கள் 16 ம் நாள்

**இ.ம.எண். 1/2025**

**in**

**அ.வ.எண். 171/2022**

1. கலையரசி
2. தினேஷ் பூபதி
3. திலிப்ராஜ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர்
2. வட்டாட்சியர், காங்கயம்
3. சரஸ்வதி
4. ஜெகதீசன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.01.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.நிர்மல்குமார், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V.முருகேசன், B.Com., B.L., அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.பிரபாகரன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள்

கேட்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் பதில் உரையை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க அனுமதிகோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொண்ட மனைவி அல்ல. முறையற்ற உறவின் மூலம் 3ம் எதிர்மனுதாரருக்கும் பழனிச்சாமி என்பவருக்கும் பிறந்தவர் தான் 4ம் எதிர்மனுதாரர் ஆவார். 1ம் மனுதாரர் மட்டுமே சட்டப்பூர்வமாக திருமணம் செய்து மனைவி ஆவார்.

ii) 3ம் எதிர்மனுதாரர் தான் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்று 3, 4 எதிர்மனுதாரர்கள் தங்கள் எதிர்வழக்குரையில் கூறுவதை நிரூபணம் செய்யும் வகையில் ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தான் இறந்துபோன பழனிச்சாமி என்பவரின் வாரிசுகள் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு இறந்துபோன

பழனிச்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எவ்வித பங்கையும் பெற உரிமை இல்லை. 3, 4 எதிர்மனுதாரர்கள் மேற்படி பழனிச்சாமி என்பவரின் இறப்பு குறித்த பதிவுகளை பெற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

iii) 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3ம் எதிர்மனுதாரர் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்றும் 4ம் எதிர்மனுதாரர் மேற்படியார்களுக்கு பிறந்த மகன் என்றும் 1ம் மனுதாரர் பழனிச்சாமி என்பவருக்கு 2ம் மனைவி என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. அதனால் 3, 4 எதிர்மனுதாரர்களின் வாதங்களை எதிர்த்து உண்மையான உண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் பதிலுரையை தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி வீதம் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/1, 2, 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) மனுதாரர்கள் தங்களது வழக்குரையில் 3ம் எதிர்மனுதாரர் காலம் சென்ற பழனிச்சாமியின் இரண்டாவது மனைவி என்றும் மேற்படி 3ம் எதிர்மனுதாரருக்கும் பழனிச்சாமிக்கும் பிறந்த குழந்தையே 4ம் எதிர்மனுதாரர் என்றும் சொல்லிவிட்டு தற்போது மேற்படி மனுவிலும், பதில் உரையிலும் வாரிசுதாரர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். மனுதாரர்கள் தான் காலம்சென்ற பழனிச்சாமியின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள் என்பதை மனுதாரர்களே தகுந்த ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்க வேண்டியதாகும். 3, 4 எதிர்மனுதாரர்கள் காலம் சென்ற பழனிச்சாமியின் சட்டப்பூர்மான வாரிசுதாரர்கள் ஆவார்கள்.

iii) மேற்படி 3, 4 எதிர்மனுதாரர்களை தற்போது வேண்டுமென்றே மேற்படி காலம் சென்ற பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் இல்லை என்று கூறுவது பழனிச்சாமியின் சொத்தை அபகரிக்கும் நோக்குடன் கூறுவதாக தெரிகிறது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் சரியான எதிர்வாதம் இல்லாததால் காலம் கடத்த வேண்டி மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இரு தரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:—**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 3ம் எதிர்மனுதாரர் பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்றும் 4ம் எதிர்மனுதாரர் மேற்படியார்களுக்கு பிறந்த மகன் என்றும் 1ம் மனுதாரர் பழனிச்சாமி என்பவருக்கு 2ம் மனைவி என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் 3, 4 எதிர்மனுதாரர்களின் வாதங்களை எதிர்த்து உண்மையான உண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் பதிலுரையை தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் எனவே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் 3, 4 எதிர்மனுதாரர்களை தற்போது வேண்டுமென்றே மேற்படி காலம் சென்ற பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் இல்லை என்று கூறுவது பழனிச்சாமியின் சொத்தை அபகரிக்கும் நோக்குடன் கூறுவதாக தெரிகிறது என்றும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் சரியான எதிர்வாதம் இல்லாததால் காலம் கடத்த வேண்டி மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், மேற்படிவீதம் இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு 2ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 16.11.2022 அன்று 1, 2

பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 06.01.2023 அன்று 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 20.01.2023 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னிட்டு அசல் வழக்கானது சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 30.01.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யும் பதிலுரையை ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் மட்டும் தான் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் மற்றும் வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டு வழக்குரையில் 1ம் வாதி இறந்துபோன பழனிச்சாமியின் முதல் மனைவி என்றும் 2, 3 வாதிகள் மகன்கள் என்றும் 3ம் வாதி பழனிச்சாமி என்பவரின் இரண்டாவது மனைவி என்றும் 4ம் பிரதிவாதி 2வது மனைவி மூலம் பழனிச்சாமிக்கு பிறந்த மகன் என்றும் சொல்லப்பட்டுள்ளளது.

8. 4ம் பிரதிவாதி தரப்பில் 06.01.2023 தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 1ம் மனுதாரர்/வாதி இறந்துபோன பழனிச்சாமியின் 2வது மனைவி என்றும் 2, 3 மனுதாரர்கள் மேற்படியார்களின் மகன்கள் என்றும் 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி இறந்துபோன பழனிச்சாமியின் சட்டப்பூர்வமான முதல் மனைவி என்றும் 4ம் எதிர்மனுதாரர் மேற்படியார்களின் மகன் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இம்மனுவோடு மனுதாரர்கள்

தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையை பரிசீலிக்கும்போது அதில் வாதிகள் மட்டும் தான் இறந்துபோன பழனிச்சாமி என்பவரின் சட்டப்பூர்வமான வாரிசுகள் என்றும் எதிர்கால பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகவே 3, 4 பிரதிவாதிகள் பெயர்களையும் வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்பத்தில் வாதிகள் சேர்த்ததாகவும் பழனிச்சாமியின் சொத்துக்களை அடைவதற்காக தற்போது தான் 3, 4 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியை அணுகியுள்ளார்கள் என்றும் எந்த ஆவணங்களும் இல்லாமல் 3ம் பிரதிவாதி பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி என்றும் 1ம் வாதி 2ம் மனைவி என்றும் 3, 4 பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

9. மேலேகண்ட பரிசீலனைகளில் இருந்து வாதிகள் 3ம் பிரதிவாதி இறந்துபோன பழனிச்சாமியின் 2ம் மனைவி என்றும் 4ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் மகன் என்று கண்டும் இறந்துபோன பழனிச்சாமியின் வாரிசுகள் என வாதிகள் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் ஆகியோர்களை விளம்புகை செய்யக்கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் 4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 3ம் பிரதிவாதி தான் இறந்துபோன பழனிச்சாமியின் முதல் மனைவி என்றும் 1ம் வாதி 2வது மனைவி என்றும் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து பதில் உரை தாக்கல் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் மனுதார்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாகவே உள்ளது.

10. எனவே மேலே கண்ட பரிசீலனைகளில் இருந்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3, 4 எதிர்மனுதாரர்களை வேண்டுமென்றே மேற்படி காலம் சென்ற பழனிச்சாமியின் வாரிசுதாரர்கள் இல்லை என்று கூறுவது பழனிச்சாமியின்

சொத்தை அபகரிக்கும் நோக்குடன் கூறுவதாக தெரிகிறது என்றும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் சரியான எதிர்வாதம் இல்லாததால் காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது மனுதாரர்களால் இறந்துபோன பழனிச்சாமியின் வாரிசுகளாக அறிவிக்க கோரி விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் வழக்குரைக்கு முரண்பாடான சங்கதிகள் பதில் உரையில் கூறப்படவில்லை என்பதாலும் இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் கருதினாலும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையானது 06.01.2023லேயே தாக்கல் செய்யப்பட்டு அசல் வழக்கானது சாட்சிகள் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மிகவும் காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் காலவிரயம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்/வாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலவு தொகையாக வரும் 05.02.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 05.02.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.01.30 20:24:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.01.30 20:24:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.